**அக்டோபர் – 19**

# TNPSC துளிகள்

- தமிழ்நாட்டில் ராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ஆறு புதிய மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட இருக்கின்றன.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள்

- பின்வரும் பதவிகளுக்கான தேர்தல்கள் கட்சி அடிப்படையில் நடத்தப்படும் என்று தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
    - பேரூராட்சிப் பஞ்சாயத்துகளின் வார்டு உறுப்பினர்கள்,
    - நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் உறுப்பினர்கள்,
    - நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சிகளின் தலைவர்கள்,
    - மாநகராட்சிகளின் மேயர்கள்,
    - ஒன்றியப் பஞ்சாயத்துகளின் வார்டு உறுப்பினர்கள்,
    - மாவட்டப் பஞ்சாயத்துகளின் வார்டு உறுப்பினர்கள்.
- தமிழகத்தில் உள்ள சென்னை மற்றும் பிற மாநகராட்சிகள் நேரடியாக அந்தந்த மேயர்களுக்கு வாக்களிக்கவுள்ளன.
- மாநகராட்சிகளுக்கான மேயர்களின் பதவிகங்களுக்கு நேரடி தேர்தலை மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- இதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கு இனி வாக்களிக்க மாட்டார்கள்.
- பின்வரும் தேர்தல்களுக்கு மாநில தேர்தல் ஆணையம் வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்த இருக்கின்றது.
    - கிராமப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்,
    - கிராமப் பஞ்சாயத்து தலைவர்,
    - ஒன்றியப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்,
    - மாவட்டப் பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்.
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பயன்படுத்தப்படும் மற்றும் நகர்ப்புற வாக்காளர்கள் அவர்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.
    - நகராட்சி வார்டு உறுப்பினர்
    - மாநகராட்சி மேயர்
    - பேரூராட்சிப் பஞ்சாயத்து தலைவர்
    - நகராட்சித் தலைவர்

# தேசியச் செய்திகள்

## உணவுப் பாதுகாப்பு மித்ரா - FSSAI

- வியாபாரத்தை எளிதாக்கும் முயற்சியில், உணவுத் தரத்தினைக் கண்காணிக்கும் அமைப்பான உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் (Food Safety and Standards Authority of India - FSSAI) ஆனது உணவுப் பாதுகாப்பு மித்ரா என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டமானது உணவுப் பாதுகாப்பு சட்டங்களுக்கு இணங்க சிறு மற்றும் நடுத்தர உணவு வணிகங்களை ஆதரிக்கும்.
- உணவுப் பாதுகாப்பு மித்ரா என்பது FSSAI ஆல் சான்றளிக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட தொழில்முறை திட்டமாகும். இது FSS சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பான இணக்கங்களுக்கு உதவுகிறது.
- அந்தந்த பணி நோக்கம் மற்றும் பொறுப்புகளைப் பொறுத்து அவை பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன- டிஜிட்டல் மித்ரா, பயிற்சியாளர் மித்ரா அல்லது சுகாதார மித்ரா.

## பாலில் கார்சினோஜென்ஸ் (புற்றுநோய் ஏற்படுத்தும் காரணிகள்)

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் மேற்கொண்ட தேசியக் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக பரிசோதிக்கப்பட்ட சில பால் மாதிரிகளில் அஃப்லாடாக்சின் M1 (AFM1) என்ற கொடிய புற்றுநோய்க்கான தடயங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- பால் கணக்கெடுப்பின் இறுதி முடிவுகள் 2019 அக்டோபர் 18 அன்று வெளியிடப்பட்டன.
- பரிசோதிக்கப்பட்ட மொத்த 6,432 பால் மாதிரிகளில், 368 (5.7 சதவீதம்) அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் அஃப்லாடாக்சின்கள் இருப்பது கண்டறியப்பட்டது.
- பின்வரும் மாநிலங்களில் அஃப்லாடாக்சின் கலப்படங்கள் அதிக விகிதங்களில் காணப் படுகின்றன
    - தமிழ்நாடு (551 மாதிரிகளில் 88)
    - டெல்லி (262 மாதிரிகளில் 38)
    - கேரளா (187 மாதிரிகளில் 37)
- புற்றுநோய் ஏற்படுத்தும் காரணிகளானது கறந்தப் பாலைக் காட்டிலும் 'பதப்படுத்தப்பட்ட' பால்பொருட்களில் அதிகம் காணப்படுகிறது.
- ஒரு மில்லிகிராம்/கிலோகிராம் அல்லது அதற்கும் அதிகமான அஃப்லாடாக்சின் செறிவுகளைக் கொண்ட உணவை உட்கொள்வது அஃப்லாடாக்சிகோசிஸை ஏற்படுத்தும் என்று சந்தேகிக்கப் படுகிறது.
- அஃப்லாடாக்சிகோசிஸ் ஆனது கடுமையான கல்லீரல் செயலிழப்பு, மஞ்சள் காமாலை, சோம்பல் மற்றும் குமட்டல், இறுதியில் மரணம் ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது என்று உலக சுகாதார அமைப்பு பிப்ரவரி 2018 இல் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## இருவழியொக்கும் (பின்பி) நாள் - அக்டோபர் 9

- ஒரு பின்பி நாள் நடக்கிறது என்றால் அந்த நாளின் தேதியைப் பின்னோக்கி மற்றும்

முன்னோக்கிப் படிக்க முடியும்.

- ❖ தேதிகள் பின்பிகளுக்கு ஒத்தவையாகவும் சமச்சீராகவும் இருக்கும்.
- ❖ பின்பி தேதி 9-10-2019 என்பது அரிதான ஒன்றாகும்.
- ❖ நாம் அதனைப் பின்னோக்கி மற்றும் முன்னோக்கிப் (9102019) படிக்கும் போதும் அதன் பொருள் ஒன்றேயாகும்.
- ❖ ஆனால் தேதி வடிவங்கள் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியாக இல்லை.
- ❖ அவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வேறுபட்டவை ஆகும்.




## மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் - அக்டோபர் 10

- ❖ மரண தண்டனையை ஒழிப்பதற்கும், மரண தண்டனை பெற்ற கைதிகளைப் பாதிக்கும் நிலைமைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ இந்த நாள் முதன்முதலில் மரண தண்டனைக்கு எதிரான உலகக் கூட்டணி என்னும் அமைப்பால் 2003 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ❖ ஐ.நா. உறுப்பு நாடுகளில் 74% ஐ பிரதிநிதித்துவப் படுத்துகின்ற 142 நாடுகள் - ஏற்கனவே மரண தண்டனையைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டன. அதை அவர்களின் தண்டனைச் சட்டத்திலிருந்து நீக்குவதன் மூலமோ அல்லது நீண்ட காலமாக மரண தண்டனை நிறைவேற்றாமலோ அதனை நீக்கியுள்ளன.
- ❖ ஐரோப்பிய மன்றமானது இந்த ஒழிப்புச் செயல்பாட்டில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. இது 1997 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பாவை மரண தண்டனை இல்லாத ஒரு உண்மையான மண்டலமாக மாற்றியுள்ளது.
- ❖ இந்த நாள் மரண தண்டனைக்கு எதிரான உலக தினத்திற்கு ஐரோப்பிய நாடுகளின் ஒரு பங்களிப்பாகும., இது ஆண்டுதோறும் இதே நாளில் அங்கு அனுசரிக்கப்படுகிறது.

## தேசிய அஞ்சல் தினம் - அக்டோபர் 10

- ❖ ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 10 ஆம் தேதி இந்தியாவில் தேசிய அஞ்சல் தினம் கொண்டாடப் படுகிறது.
- ❖ கடந்த 150 ஆண்டுகளாக இந்திய தபால் துறை ஆற்றியப் பங்களிப்பை நினைவு கூரும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- ❖ அக்டோபர் 9 அன்று கொண்டாடப்படும் உலக அஞ்சல் தினத்தின் நீட்டிப்பாக இந்திய அஞ்சல் தினம் கொண்டாடப்படுகிறது.
- ❖ இந்திய அஞ்சல் 1854 ஆம் ஆண்டில் டல்ஹெளசி பிரபு என்பவரால் நிறுவப்பட்டது.
- ❖ இது தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

- தபால் துறையின் கீழ், 6 இலக்க PIN (Postal Index Number) முறையை மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம் 1972 ஆகஸ்ட் 15 அன்று அறிமுகப்படுத்தியது.
- பின்கோடில் உள்ள PIN என்ற சொல் அஞ்சல் குறியீட்டு எண்ணைக் குறிக்கிறது
- பின் குறியீட்டின் முதல் இலக்கமானது அப்பகுதியைக் குறிக்கிறது.
- இரண்டாவது இலக்கமானது துணைப் பகுதியைக் குறிக்கிறது.
- மூன்றாவது இலக்கமானது மாவட்டத்தைக் குறிக்கிறது.
- கடைசி மூன்று இலக்கங்கள் ஒரு குறிப்பிட்ட முகவரியைக் கொண்டிருக்கும் தபால் நிலையத்தைக் காட்டுகிறது.
- தேசிய தபால் வாரமும் அக்டோபர் 9 முதல் அக்டோபர் 15 வரை கொண்டாடப்படுகிறது.




| Date | Day | Description |
|---|---|---|
| 9th October, 2019 | Wednesday | World Post Day |
| 10th October, 2019 | Thursday | Banking Day |
| 11th October, 2019 | Friday | PLI Day |
| 12th October, 2019 | Saturday | Philately Day |
| 14th October, 2019 | Monday | Business Development Day |
| 15th October, 2019 | Tuesday | Mails Day |

## உலக முட்டை தினம் - அக்டோபர் 11

- உலக முட்டை தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் இரண்டாவது வெள்ளிக்கிழமை வருகிறது.
- இந்த ஆண்டு இந்த தினமானது 11 அக்டோபர் 2019 அன்று கொண்டாடப் பட்டது.
- இந்த தினமானது சர்வதேச முட்டை ஆணையத்தின் வியன்னா மாநாட்டில் 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- உலக முட்டை தினத்தை விஜயவாடாவில் கொண்டாட ஆந்திரா திட்டமிட்டிருந்தது.
- 2019 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "இன்றும் ஒவ்வொரு நாளும் உங்கள் முட்டையை உண்ணுங்கள்" என்பதாகும்.

## உலக உடல் பருமன் தினம் - அக்டோபர் 11

- உலக உடல் பருமன் தினம் அக்டோபர் 11 அன்று அனுசரிக்கப் படுகிறது.
- இந்த நாள் உடல் பருமனுக்கான காரணங்கள் மற்றும் அதனைத் தடுப்பதற்கான குறிப்புகள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- உலக உடல் பருமன் தினமானது உலக உடல் பருமன் கூட்டமைப்பால் 2015 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டிற்கான உலக உடல் பருமன் தினமானது உலகளாவிய மற்றும் ஒருங்கிணைந்த குரலின் தேவைக்குப் பதிலளிக்கும் வகையில் 2020 ஆம் ஆண்டின் உலக உடல் பருமன் தினத்தை 2020 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் தேதியில் ஒரு புதிய உலக உடல் பருமன் தினத்தைத் தொடங்க வழிவகுக்கும்.




## பெண் குழந்தைக்கான சர்வதேச தினம் - அக்டோபர் 11

- இது ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்ட சர்வதேச அனுசரிப்பு தினம் ஆகும்.
- அக்டோபர் 11, 2012 - பெண் குழந்தைக்கான முதல் சர்வதேச தினம் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் "பெண்களின் வலிமை: எழுதப்படாதது மற்றும் தடுத்து நிறுத்த முடியாதது".
- 1995 ஆம் ஆண்டில், பெண்கள் பற்றிய நான்காவது உலக மாநாட்டை ஐ.நா. அமைப்பானது சீனாவின் பெய்ஜிங்கில் கூட்டியது.
- பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை மனித உரிமைகளாக அங்கீகரிக்க இந்த மாநாடு தீர்மானித்தது.
- இந்த மாநாட்டில் பெய்ஜிங் பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான தளம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான ஒரு மிக விரிவான கொள்கை நிகழ்ச்சி நிரல் ஆகும்.



## உலகத் தர நிர்ணய நாள் - அக்டோபர் 14

- இது சர்வதேச தர நிர்ணய நாள் என்றும் அழைக்கப்படுகிறது.
- உலகத் தர நிர்ணய தினத்தின் நோக்கம், உலகப் பொருளாதாரத்திற்குக் தரப்படுத்துதலின் முக்கியத்துவம் குறித்து கட்டுப்பாட்டாளர்கள், தொழில்துறை மற்றும் நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- 1946 ஆம் ஆண்டில், 25 நாடுகளின் பிரதிநிதிகள் முதன்முதலில் லண்டனில் கூடி, தரநிலையாக்கத்தை எளிதாக்குவதில் கவனம் செலுத்தி ஒரு சர்வதேச அமைப்பை உருவாக்க முடிவு செய்த தினமான அக்டோபர் 14 தேதியை நினைவில் கொள்ள அந்த தினம் குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.
- தரப்படுத்துதலுக்கான சர்வதேச அமைப்பு இதற்கு பின்பு ஒரு வருடம் கழித்து உருவாக்கப்பட்டாலும், முதல் உலகத் தர நிர்ணய நாள் 1970களில் கொண்டாடப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் “ஒரு உலகளாவிய நிலையை உருவாக்கும் காணொளித் தரநிலைகள்” என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★